தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)
Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C.,
State President,
CELL : 9443082572

J. BARATHAMANI, T.T.C.,
State General Secretary,
CELL : 9003489826

L. MANOHARAN, T.T.C.,
State Treasurer,
CELL : 9442883275

V. KALAIVANAN, B.COM, M.A, PGDCA.,
Vice Presedent

M. DURAIPANDI, B.A, T.T.C.,
Joint Secretary

A.M. SATHYAN
Vice President

V. CHANDIRASEKARAN, M.A, M.COM, B.ED.,
Joint Secretary

M. KARTHIKEYAN, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L.,
Founder Adviser

D.A. DHARMARAJ, B.A.,
Honorary President

பெறுதல் 07-05-2020

உயர்திரு. உயர்கல்வித்துறை செயலாளர் அவர்கள்,
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை.

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள்: ஊரடங்கு மே17 வரை நீட்டிப்பு — மே 17க்குப் பிறகு தட்டச்சு பயிலகங்கள் செயல்பட அனுமதிக்க வேண்டி மனு சமர்ப்பித்தல் - தொடர்பாக.

---

வணக்கம். அரசாணைக்கிணங்க மார்ச் 17 முதல் தட்டச்சுப் பயிலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு இரண்டு மூன்று கட்டமாக ஊரடங்கு நீட்டிக்கப்பட்டதனால் பயிலகங்களும் விடுமுறையை நீட்டிப்பு செய்ய நேரிட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் சில தொழிற்சாலைகளுக்கும், ஐ.டி நிறுவனங்களுக்கும் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதே போல மே 18ந் தேதி முதல் தட்டச்சு பயிலகங்கள் செயல்பட அனுமதிக்க வேண்டுகிறோம். மே 18க்கு பிறகு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டாலும் கூட அரசின் கொரோனா தடுப்பு நடவடிக்கை விதிமுறைகளை பின்பற்றி தட்டச்சுப் பயிலகங்கள் செயல்பட அனுமதிக்க அளித்திட வேண்டி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. தட்டச்சுப் பயிலகங்களில் மற்ற கல்விக் கூடங்கள் போல ஒரே நேரத்தில் வகுப்பறைகள் போல மாணவர்கள் நெருக்கமாக அதிகமான எண்ணிக்கையில் இருக்க மாட்டார்கள். ஒரு தட்டச்சுப் பொறி அமைந்துள்ள இடத்திற்கும் அடுத்த தட்டச்சுப் பொறி அமைந்துள்ள இடத்திற்கும் இடையில் இடைவெளி உள்ளது. மேலும் 1 மணி நேரத்திற்கு சிறிய பயிலகமாக இருந்தால் 6 முதல் 10 வரையிலான மாணவர்களும், பெரிய பயிலகமாக இருந்தால் 10 முதல் 30 மாணவர்கள் வரையிலும் பயிற்சி செய்வார்கள். மேலும் பயிலகங்கள் காலை 6 மணி முதல் முற்பகல் வரையிலும், அதேபோல மாலை முதல் இரவு 7 மணி வரை மட்டுமே இயங்குகின்றன. பயிலம் வருகின்ற மாணவ / மாணவியர்கள் அனைவரும் பயிலகம் அமைந்துள்ள சுற்றுப்பகுதியினை சார்ந்தவர்களே ஆவார்கள். பகுதி விட்டு பகுதி வந்து பயிற்சி மேற்கொள்ளும் மாணவர்கள் மிகச் சொற்பமே. இதனால் ஒரே நேரத்தில் அதிக அளவிலான மாணாக்களர்கள் கூடும் நிலை ஏற்பட வாய்ப்பில்லை.

2. தட்டச்சுப் பயிற்சி என்பது முற்றிலும் திறன் பயிற்சி சம்பந்தப்பட்டது. மற்றைய பள்ளிப் பாடங்கள் போல சேர்த்துப் படிக்கக் கூடியது அல்ல. அன்றாடம் 1 மணி நேரம் வீதம் 6 மாத பயிற்சிப் பெற்றாக வேண்டும்.

..2..

# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C., State President, CELL : 9443082572

J. BARATHAMANI, T.T.C., State General Secretary, CELL : 9003489826

L. MANOHARAN, T.T.C., State Treasurer, CELL : 9442883275

V. KALAIVANAN, B.COM, M.A, PGDCA., Vice Presedent

M. DURAIPANDI, B.A, T.T.C., Joint Secretary

A.M. SATHYAN Vice President

V. CHANDIRASEKARAN, M.A, M.COM, B.ED., Joint Secretary

M. KARTHIKEYAN, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L., Founder Adviser

D.A. DHARMARAJ, B.A., Honorary President




3. அடுத்து வரும் ஆகஸ்ட் அரசுத் தட்டச்சுத் தேர்வுகள் ஓரிரு மாதங்கள் தள்ளிப்போனாலும் கூட அந்த தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்குக் குறைவான பயிற்சிக்கான நேரமே உள்ளது.

4. மேலும் 3500க்கும் மேற்பட்ட அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சுப் பயிலகங்கள் உள்ளது. இவற்றில் 75 சதவிகத்திற்கும் மேலான பயிலகங்கள் வாடகை கட்டிடங்களிலேயே இயங்கி வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் வருமானமே இல்லாமல் 3 மாத வாடகை மற்றும் பணியாளர் சம்பளம் ஆகியவைகளைக் கொடுத்தும் குடும்பத்திற்கான அன்றாடத் தேவைகளுக்கே மிகவும் சிரமப்படும் சூழ்நிலையில் நாங்கள் உள்ளோம்.

எனவே மேற்கூறிய காரணங்களை பரிசீலனை செய்து தட்டச்சுப் பயிலகங்கள் மே 18ந் தேதி முதல் செயல்பட அனுமதி அளித்திட ஆவன செய்ய வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் அரசின் கொரோனா தடுப்பு நடவடிக்கை விதிமுறைகளை பின்பற்றி பயிலகங்களை நடத்திடுவோம் என்ற உறுதியையும் அளிக்கின்றோம்.

நன்றி.

இங்ஙனம்

7/5/2020

எல். செந்தில்
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு தட்டச்சு — கணினி பள்ளிகள் சங்கம்
காஞ்சிபுரம்.